Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 10, 2024

புதன்கிழமை ஜூலை 10, 2024 | ஒளி: 10 கதிர்: 291 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## எம்.பிக்கு திறந்த பிடிவிறாந்து

ரஸீன் ரஸ்மின்



புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதியும், மாவட்ட நீதவானுமான திருமதி அயோனா விமலரத்ன கற்பிட்டி சுற்றுலா நீதவான் நீதிமன்றில் வைத்து திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### பெருந்தோட்ட மக்கள்

## “தேயிலையை மாத்திரம் நம்பியிருக்கவில்லை”



பெருந்தோட்ட மக்களை தொடர்ந்து துன்புறுத்தினால் பல்லாயிரம் கணக்கானோர் வீதிக்கு இறங்குவார்கள். பெருந்தோட்ட மக்கள் தேயிலை தொழிற்றுறையை மாத்திரம் நம்பியிருக்கவில்லை என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலரும் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ‘டக்வொர்த்-லூவிஸ்’ தேடுகிறார் ஜனாதிபதி



கிரிக்கெட்டில் காணப்படும் ‘டக்வொர்த்-லூவிஸ்’ முறை மூலம் விளையாடாமலே வெற்றி பெறுவதைப் போன்று தேர்தலிலும் போட்டியிடாமல் வெற்றிபெறும் வழி உள்ளதா? என்று ஜனாதிபதி ஆராய்ந்துகொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) நடைபெற்ற தொலைத் தொடர்பு திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடத்தில் நடக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் மக்களிடையே கடந்த காலங்களில் சந்தேகங்கள் எழுந்திருந்தன.

தொடர்ச்சி P2

## ‘அஸ்வெசும’: அதிரடி அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமைய முன்னெடுக்கப்படும் ‘அஸ்வெசும’ வேலைத் திட்டத்தின் முதல் கட்டத்தில் தகுதிபெற்ற 18 இலட்சத்திற்கும் அதிகமானோருக்கு மேலதிகமாக இரண்டாம் கட்டத்தில் மேலும் 450,924 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இவற்றில், நலன்புரிச் சேவைகளைப் பெறத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து, தகவல் சரிபார்க்கும் பணிகள் ஜூலை 15ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என நலன்புரிச் சபை, செவ்வாய்க்கிழமை (09) அறிவித்துள்ளது



## பாதுகாப்புக்கு உத்தரவாதம் கேட்கிறார் ஸ்ரீதரன்

என்னையும் எனது குடும்பத்தையும் இலக்கு வைத்து அச்சுறுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதால் எனதும், எனது குடும்பத்தின் பாதுகாப்புக்கும் சபாநாயகர் உத்தரவாதம் அளிக்கவேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான சிவஞானம் ஸ்ரீதரன் வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ச்சி P2

## 7 பேர் கைது

அதுருகிரியவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கிளப் வசந்த உட்பட இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பச்சைக் குத்தும் கடை உரிமையாளர் உட்பட 7 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



## எம்.பியானார் குகதாசன்

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக கதிரவேலு சண்முகம் குகதாசன் செவ்வாய்க்கிழமை (09) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி

தொடர்ச்சி P2



© Parliament of Sri Lanka

## புதிய எம்.பி. சபையில் தடுமாறியதால் பரபரப்பு

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக செவ்வாய்க்கிழமை (09) பதவியேற்றுக்கொண்ட சண்முகம் குகதாசன், நிலை தடுமாறியதால் சபையில் சற்று பரபரப்பு ஏற்பட்டது.

சம்பந்தனின் மறைவை அடுத்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்ட சண்முகம் குகதாசன் சபாநாயகருக்கு முன்பாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பதவிப்பிரமாணம் செய்த பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டில் கையொப்பமிடுவதற்காக இறங்கிவந்தார். அப்போது கால் இடறி நிலை தடுமாறி விழப்போனார். எனினும், அருகில் நின்ற படைக்கல சேவிதர் தாங்கிப்பிடித்துப் பாதுகாத்தார்.

இதன்பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டில் கையொப்பமிட்ட குகதாசன் அரச மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு வணக்கம் தெரிவித்தவாறு எதிர்க்கட்சி பக்கத்தில் பின் வரிசை ஆசனத்தில் அமர்ந்தார்.

## “வேலை வெட்டி இல்லாமல் வரவில்லை”

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் 4 ஆண்டுகளுக்கு முன்னர் என்னால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு இன்றுவரை பதில் கிடைக்கவில்லை. நாங்கள் ஒன்றும் வேலை வெட்டியில்லாமல் காலையில் புறப்பட்டு பாராளுமன்றம் வரவில்லையென என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா. சாணக்கியன் சபாநாயகரிடம் கடும் அதிருப்தியைத் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்ற எம்.பியால் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம், நாட்டில் குழப்பகரமான நிலைமைகளைத் தோற்றுவிக்கக் கூடிய செய்திகளை வெளியிடும் பல போலி ஊடகங்கள் இலங்கையில் செயற்படுவதை அமைச்சர் அறிவாரா?, ஆம் எனில் மேற்படி அந்த ஊடகங்கள் என்ன?

தொடர்ச்சி P2

### வடக்கு, கிழக்கு வேலையில்லா பட்டதாரிகள் தொடர்பில்

## என்ன நிலைப்பாட்டில் அரசாங்கம் இருக்கின்றது

வடக்கு, கிழக்கில் இருக்கும் வேலையில்லா பட்டதாரிகள் தொடர்பில் அரசாங்கம் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றது என்பதனை அறிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு, கிழக்கிற்கு அண்மையில் பயணம் மேற்கொண்டிருந்தேன். அங்கே வடக்கு மாகாணத்திலும் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வேலையில்லா பட்டதாரிகள் அவர்களின் கஷ்டங்களை முன்வைத்தனர்.

தொடர்ச்சி P2

### அடையாளம் இன்றி

## 2 மில்லியன் சிம்கள் பாவனையில் உள்ளன

நாட்டில் சில குற்றச் சம்பவங்களைக் கண்டறிவதில் பாரிய பிரச்சினைகளை முன்வைத்த முறையான அடையாளங்கள் இன்றி சுமார் இரண்டு மில்லியன் சிம் அட்டைகள் பாவனையில் இருப்பதாகத் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிம் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும் போது, அடையாள அட்டைகள் அவசியமில்லை என புதிய சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர், சிம் அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு அடையாள அட்டையைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும் என அவர் பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (09) குறிப்பிட்டார்.



தொடர்ச்சி P2

## 1,700 ரூபாய் சம்பளம் கேட்டு கொழும்பில் ஆர்ப்பாட்டம்

ஆ.ரமேஸ்.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பள உயர்வு சம்பந்தமாக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்கால தடையுத்தரவின் பின் தொழிலாளர்களை இழிவு படுத்தும் செயற்பாடுகளில் கம்பனிகாரர்கள் ஈடுபட்டுள்ளனர் என குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், 1,700 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் தோட்டத் தொழிலாளர்கள் கொழும்புக்கு படையெடுத்து தமது உரிமைக்காகப் போராட்டம் நடத்தினர்.

தொடர்ச்சி P2







# 'டக்வொர்த்-லூவிஸ்'



ஜனாதிபதியினது செயற்பாடுகளும் அவருடன் இருப்பவர்களின் கருத்துக்களுமே இவ்வாறான சந்தேகங்களை எழுப்பின. இந்நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலத் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இது திட்டமிட்டே செய்யப்பட்டது. ஆனால், அந்த மனு உயர்நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி உயர்நீதிமன்றத்திற்கும் அதன் நீதியரசர்களுக்கும் மக்கள் சார்பாக நன்றியைக் கூறுகின்றோம். ஜனநாயக உரிமையைப் பாதுகாக்க நீதிமன்றமும் முன்வந்துள்ளது. இதன்மூலம் மக்களின் வாக்குரிமைகளை உறுதிப்படுத்த முடிந்துள்ளது.

ஜனாதிபதி பதவிக்காலத்தை ஒத்தி வைப்பது தொடர்பில் அமைச்சரவையில் பத்திரமொன்று தாக்கல் செய்யப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் கூறியிருந்தார். அமைச்சர்கள் இங்கு இருக்கின்றனர். இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரின் கருத்து உண்மையா? பொய்யா? என்பதனை கூற வேண்டும்.

இப்போது மெட்ச் விளையாட அனைவரும் தயாராக இருக்கின்றோம். ஆனால், விளையாடாமலேயே வெற்றிபெறவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார். கிரிக்கெட்டில் காணப்படும் 'டக்வொர்த்-லூவிஸ்' முறையிலாவது இதில் வெற்றிபெறவே அவர் முயற்சிக்கின்றார். இதற்காக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார் என்றார்.

# எம்.பியானார் குகதாசன்

ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவை அடுத்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு கதிரவேலு சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர் கல்வியைப் பெற்றுள்ளார்.1975ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழ் அரசு கட்சியில் உறுப்பினராக இருந்து 2018ஆம் ஆண்டு முதல் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

மேலும், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இவர் போட்டியிட்டு, இரா. சம்பந்தனுக்கு அடுத்தபடியாக கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

# எம்.பிக்கு திறந்த பிடிவிறாந்து

கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சிப்பிட்டியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் பொறுப்புக் கூறும் வழக்கு திங்கட்கிழமை (08) மாலை கற்பிட்டி சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் குறித்த வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காத நிலையில், நீதவான் இவ்வாறு திறந்த பிடியாணை உத்தரவை வழங்கியுள்ளார்.

இதற்கு முன்னரும், குறித்த பாராளுமன்ற உறுப்பினர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும் அவர் சார்பில் சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவனமொன்றுக்கு சொந்தமான கட்டிடத்திற்குள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் அங்குள்ள சொத்துக்களை சேதப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக கற்பிட்டி பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "வேலை வெட்டி இல்லாமல் வரவில்லை"

பதிவு செய்யப்படாத போலி இணையத்தளங்களைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா, ஆமெனில், அந்நடவடிக்கைகள் என்ன? இன்றேல் ஏன் என கேள்வியெழுப்பினார்.

இந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பில் அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கால அவகாசம் கோரினார். இதனையடுத்தே எழுந்த இரா.சாணக்கியன் எம்.பி. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் ஒருமாதத்துக்கு முன்னர் ஒரு விடயம் குறித்து கேள்வி கேட்டிருந்தேன், விடைகளைச் சபைக்குச் சமர்ப்பித்ததாகக் குறிப்பிட்டார். தேடிப் பார்த்தேன் விடை தொடர்பான ஆவணங்கள் கிடைக்கவில்லை.

**நாங்கள் ஒன்றும் வேலை வெட்டியில்லாமல் காலையில் புறப்பட்டு பாராளுமன்றம் வரவில்லை. இந்த கேள்விகளுக்கு ஏன் பதிலளிக்க முடியாது?**
**பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் எனக்கு எவ்வித தனிப்பட்ட முரண்பாடும் கிடையாது. ஆகவே, இரண்டில் ஒன்றைச் செய்யுங்கள்**

மேற் குறிப்பிடப்பட்ட கேள்விகளை 2020 ஆம் ஆண்டும் கேட்டிருந்தேன். 4 வருடங்கள் கடந்தும் இன்றுவரை பதில் கிடைக்கவில்லை. நாங்கள் பல வேலைகளுக்கு மத்தியில் தான் பாராளுமன்றத்துக்கு வருகிறோம். நாங்கள் ஒன்றும் வேலை வெட்டியில்லாமல் காலையில் புறப்பட்டு பாராளுமன்றம் வரவில்லை. இந்த கேள்விகளுக்கு ஏன் பதிலளிக்க முடியாது?பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் எனக்கு எவ்வித தனிப்பட்ட முரண்பாடும் கிடையாது. ஆகவே, இரண்டில் ஒன்றைச் செய்யுங்கள் என்றார்.

இதற்குப் பதிலளித்த அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தற்போது இந்தக்கேள்வி முதல் தடவையாக முன் வைக்கப்பட்டுள்ளது. அதனால்தான் அமைச்சரினால் கால அவகாசம் கேட்கப்பட்டுள்ளது என்றார்.

# என்ன நிலைப்பாட்டில் அரசாங்கம் இருக்கின்றது

அவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருவதுடன், கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர். இந்த வேலையில்லாப் பட்டதாரிகள் தொடர்பில் அரசாங்கத்தின் பதில் என்ன? அவர்கள் தொடர்பான வேலைத்திட்டம் என்ன? அரசாங்கத்தின் கொள்கை என்ன? அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுமா? அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏன் எங்களை நியமிக்க முடியவில்லை என்று கேட்கின்றனர். அவர்களின் கோரிக்கை அறிக்கையைச் சபையில் முன்வைக்கின்றேன்.

இதேவேளை நாட்டில் வேலையில்லா பட்டதாரிகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்துள்ளது. எமது இலவச கல்வியைப் பெற்று பின்னர் வேலையில்லா வரிசைக்குள் அவர்கள் செல்லப் போகின்றனர்?. இதனால் இவர்கள் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் தீர்வு தொடர்பில் பதிலளிக்க வேண்டும் என்றார்.

# "தேயிலையை மாத்திரம் நம்பியிருக்கவில்லை"

ஜனாதிபதி வேட்பாளரும் ஹேலிஸ் நிறுவன உரிமையாளருமான தம்மிக்க பெரேராவே 1,700 ரூபாய் சம்பளத்தை எதிர்க்கிறார். இவரது மூன்று பெருந்தோட்ட நிறுவனங்கள் மாத்திரம் 3000 மில்லியனுக்கும் அதிகமாக இலாபமடைந்துள்ளன என்றார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்ற இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில்,

தோட்டத்தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்பு கிடைக்காது, அரசாங்கம் நாடகம் ஆடுகிறது என்று ஒரு சிலர் மக்களைத் தூண்டிவிடுகிறார்கள். சம்பள விவகாரத்தில் எந்நிலையில் உள்ளோம் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.அரசியல் நோக்கத்துடன் ஜனாதிபதியிடம் 1,700 ரூபாய் சம்பள கோரிக்கையை நாங்கள் முன்வைக்கவில்லை. 2021ஆம் ஆண்டு 1,000 ரூபாய" சம்பளத்தைப் பெற்றுக் கொடுத்தோம். 2021 முதல் 2023ஆம் ஆண்டு வரை 1,000 ரூபாய் சம்பளம் நடைமுறையில் இருந்தது.

பெருந்தோட்ட கம்பனிகளின் கட்டுப்பாட்டில் மக்கள் வாழும் இடங்களைக் கிராமங்களாக அடையாளப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தோட்ட பகுதிகளைக் கிராமமாக அறிவித்துக் காணி உரிமையைப் பெற்றுக் கொடுப்போம். பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மலையக மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.அதுவே எப்போது அவசியம் என்றார்.

# 2 மில்லியன் சிம்கள் பாவனையில் உள்ளன

2018ஆம் ஆண்டுக்கு முன்னர் முறையான அடையாளங்கள் இன்றி பெறப்பட்ட சுமார் இரண்டு மில்லியன் சிம் கார்டுகள் தற்போது பாவனையில் உள்ளதாகவும், இது சில குற்றச் சம்பவங்களைக் கண்டுபிடிப்பதில் கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தம்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், சிம் கார்டுகளை பெற்றுக்கொள்ளும் போது தவறான தகவல்களை வெளியிடுபவர்களுக்கு எதிராக சட்டமூலம் சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

# பாதுகாப்புக்கு உத்தரவாதம் கேட்கிறார் ஸ்ரீதரன்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்ற இலங்கை தொலைத்தொடர்பு திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் அவர் பேசுகையில்,

இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எனது வதிவிட இல்லத்திற்கு முன்னால் கடந்த 28ஆம் திகதி கருப்புத்துணியால் இலக்கத்தகடுகள் மறைக்கப்பட்ட 4 மோட்டார் சைக்கிள்கள் வந்துநின்றன.

வெள்ளிப்பிடியிட்ட வாள்கள், கூரிய ஆயுதங்களுடன் முகமூடி அணிந்து வந்த 12 பேர் பாடசாலை நேரமான காலை 8.05 மணியளவில் நடமாடினர். இந்த நடமாட்டம் எனது குடும்பத்தினரையும் அவ்வீதியில் வசிக்கும் ஏனைய பொது மக்களையும் அச்சுறுத்தும் வகையில் அமைந்திருந்ததை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இது எனதும், எனது குடும்பத்தினரினதும் பாதுகாப்பு குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இது தொடர்பில் சபாநாயகர் உயர்ந்த கரிசனை கொண்டு மேற்குறித்த சம்பவங்களின் பின்னணி குறித்து ஆராய்ந்து முறையான விசாரணை நடத்த ஆவன செய்து எனதும், எனது குடும்பத்தின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றார்.

# தமது நிலைப்பாட்டை குறிப்பிட முடியாது

சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரச்சினையை நான் சபைக்கு முன்வைப்பதற்கு முன்னர் அவ்விடயம் குறித்து தொடர்புடைய தரப்பினர் தமது நிலைப்பாட்டைக் குறிப்பிட முடியாது. ஆகவே, பாராளுமன்ற கோட்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படுங்கள் என சபாநாயகரிடம் நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வலியுறுத்தினார்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., நீதியமைச்சர்,பிரதம நீதியரசர் ஆகியோர் உங்களுக்கு (சபாநாயகரிடம்) அனுப்பியுள்ள கடிதத்தை நீங்கள் சபையில் குறிப்பிடுகின்றீர்கள், இது சரியா, பாராளுமன்ற முறைமையில் இவ்வாறான தன்மை கிடையாது என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இது சிறப்புரிமை தொடர்பான விடயம். நான் கடிதத்தை வாசிக்கவில்லை. கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளதாகச் சபைக்கு அறிவித்தேன் அதுமட்டும்தான் தான் என்றார்.

இதன்போது எழுந்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிடுவது சரியானதே, ஏனெனில், நீதிமன்ற கட்டமைப்பின் ஒருசில செயற்பாடுகளினால் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு (சபாநாயகர்) நான் எழுத்து மூலமாக அறிவித்துள்ளேன்.

சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரச்சினையை நான் சபைக்கு முன்வைப்பதற்கு முன்னர் அவ்விடயம் குறித்து தொடர்புடைய தரப்பினர் தமது நிலைப்பாட்டைக் குறிப்பிட முடியாது. பாராளுமன்ற நிலையியல் கட்டளை மற்றும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் அதற்கான அதிகாரம் வழங்கப்படவில்லை. ஆகவே, பாராளுமன்ற கோட்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படுங்கள் என்றார்.

இதன்போது மீண்டும் எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. நீதியமைச்சர் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் அனுப்பிய கடிதத்தை நீங்கள் சபையில் குறிப்பிட முடியாது. அது பாராளுமன்ற முறைமைக்கு எதிரானது என்றார்.

**நீதிமன்ற கட்டமைப்பின் ஒருசில செயற்பாடுகளினால் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு (சபாநாயகர்) நான் எழுத்து மூலமாக அறிவித்துள்ளேன்.**
**சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரச்சினையை நான் சபைக்கு முன்வைப்பதற்கு முன்னர் அவ்விடயம் குறித்து தொடர்புடைய தரப்பினர் தமது நிலைப்பாட்டைக் குறிப்பிட முடியாது. பாராளுமன்ற நிலையியல் கட்டளை மற்றும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் அதற்கான அதிகாரம் வழங்கப்படவில்லை. ஆகவே பாராளுமன்ற கோட்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படுங்கள்**

இதற்கு பதிலளித்த சபாநாயகர்,நீதியமைச்சர் எனக்குத் தனிப்பட்ட கடிதம் அனுப்பவில்லை. சபாநாயகர் என்ற அடிப்படையில் எனக்குக் கடிதம் அனுப்பியிருந்தார் அதனைச் சபைக்கு அறிவிப்பது எனது பொறுப்பு.கடிதத்தின் உள்ளடக்கத்தைக் குறிப்பிடப் போவதில்லை என்றார்.

இதன்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான முஜிபூர் ரஹ்மான் நீதியமைச்சர் குறிப்பிட்ட விடயங்களை ஆராய்ந்து நீதிச்சேவை ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளதா, அந்த அறிக்கையைச் சபைக்குச் சமர்ப்பிப்பீர்களா? என்று கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் அந்த அறிக்கையைச் சபைக்குச் சமர்ப்பிக்க முதலில் இடமளியுங்கள் என்று குறிப்பிட்டு நீதிச்சேவை ஆணைக்குழுவின் பரிசீலனை அறிக்கையைச் சபைக்குச் சமர்ப்பித்தார்.



“சம்பந்தனின் மறைவை வைத்து

# அனுதாப அரசியல் செய்ய முயற்சி”

செந்தூரன் பிரதீபன்

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும் என சம்பந்தனின் மறைவு தொடர்பாக அனுதாபம் வெளியிட்ட ஜனாதிபதிக்குத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறிய விடயம் அனுதாப அரசியலாகவே பார்க்கப்படுகின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

சம்பந்தனின் ஆயுட் காலத்திலேயே தமிழ்த் தேசிய பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டதாகவும்

துரதிர்ஷ்டமாக அவர் மறைந்து விட்டார் எனவும் தானும் சம்பந்தனும் ஒன்றாகப் பாராளுமன்றம் வந்தமை தொடர்பில் ஜனாதிபதி சுட்டிக்காட்டியதாகவும் சுமந்திரன் கூறியிருக்கின்றார். ஆகவே, இந்த வருடம் ஒக்ரோபர் முடிவதற்கு முன்னர் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனவும் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.



அமரர் சம்பந்தன் சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட தீர்வுத் திட்டத்தை அன்றைய இனவாத ஆட்சியாளர்களுடன் கைகோர்த்து அத்திட்டத்தைத் தீயிட்டு எரித்திருந்தார்.

அந்த தீர்வுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் அல்லது சேர்க்கப்படவேண்டிய விடயங்கள் அல்லது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் மேலும் வலுவாக இணைக்கப்பட வேண்டிய விடயங்களைச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். அதை விவாதித்திருக்க வேண்டும். அதனால் அந்த தீர்வுத் திட்டம் ஆராயாமலேயே தீயுடன் சங்கமமானது. அந்த வாய்ப்பையும் சம்பந்தன் பயன்படுத்தியிருக்கவில்லை.

பின்னர் நல்லாட்சி அரசைக் கொண்டு வந்தவர்கள் நாங்கள் என மார்பு தட்டிபுளகாங்கிதம் அடைந்திருந்தனர். அந்த சந்தர்ப்பத்தில் கூட எதிர்க்கட்சி தலைவராகவும் அதிகாரம் படைத்த ஆட்சியாளர்களாகவும் வலம்வந்த சமயத்தில் கூட, மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து எமது அரசியலுரிமை பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகராமல் அரசுக்கு முண்டுகொடுத்து கொழும்பில் அரச மரியாதைகளுடன் ராஜபோக வாழ்வையே தொடர்ந்திருந்தனர்.

தமிழ் மக்களது அரசியலுரிமைப் பிரச்சினைக்கான தீர்வோ நில விடுவிப்போ, அரசியல் கைதிகளின் விடுதலைப்பற்றியோ, அல்லது வடக்கு கிழக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைப்பதையோ அவர் மேற்கொண்டிருக்கவில்லை.

ஆயினும் அவரும் அவரது கட்சிசார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிரடிப்படையின் பாதுகாப்புடன் வலம் வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

மைத்திரிபால சிறிசேனவை அரியணையில் ஏற்றிவைத்து அழகுபார்த்து தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொண்டார்களே தவிர மக்களுக்கான அரசியலுரிமை தீர்வை நோக்கி ஐந்து ஆண்டுகளும் கும்பகர்ணர்கள் போல் உறக்கத்திலேயே இருந்தனர்.

இப்போது ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதி தனது பதவிக்காலம் நிறைவுக்கு வரும்முன் தீர்வை வையுங்கள் என ஒப்பாரியிடுவது அனுதாப அரசியலே தவிரத் தமிழ் மக்களது அரசியல் உரிமைக்கான உன்னதமான கோரிக்கையாக இருக்காதென்பது அவர்களுக்கே தெரிந்த விடயம். ஆகவே இதனை மக்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் இரத்து:

## கடை உரிமையாளருக்கு சிறை

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலை நோயாளர்களுக்கு மனித நுகர்விற்குப் பொருத்தமற்ற பாண் வழங்கிய ஒப்பந்தகாரரின் ஒப்பந்தத்தை ஏறாவூர் நீதவான் நீதிமன்ற நீதவான் உடனடியாக இரத்து செய்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் நோயாளர்கள் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து சுகாதார வைத்திய அதிகாரி, மற்றும் செங்கலடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மனித நுகர்விற்குப் பொருத்தமற்ற உணவுகளை வைத்தியசாலை நோயாளிகளுக்கு வழங்கிய குற்றச்சாட்டின் கீழ் வைத்தியசாலைக்கு உணவு வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர், உணவை வழங்கிய கடை உரிமையாளரிற்கு எதிராக ஏறாவூர் நீதிவான் நீதிமன்றில் திங்கட்கிழமை வழக்கு தாக்குதல் செய்து இருவரையும் முன்னிறுத்தினர்.



இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் நோயாளர்களுக்கு உணவு வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தாரரின் ஒப்பந்தத்தினை உடனடியாக இரத்து செய்ததுடன், 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் அதை உரிய தவணையில் கட்டத்தவறின் 3 மாதகால சிறைத் தண்டனையும் 10 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாத சிறைத் தண்டனையும் வழங்கி உணவு தயாரித்து வழங்கிய கடை உரிமையாளரை 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் ஒரு மாதகால சிறை தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

இரத்த காயங்களுடன்

## சிறுமியின் சடலம் மீட்பு

நிவித்திகலை - வட்டாபொத, யொஹுன் கிராமத்தில் உள்ள இறப்பர் தோட்டத்திற்கு அருகில் உள்ள பாதையில் இருந்து திங்கட்கிழமை(08) முகத்தில் இரத்த காயங்களுடன் மர்மமான முறையில் 16 வயது சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்த சிறுமியின் தாயார் வட்டாபொத விகாரைக்கு அருகில் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வருவதோடு, சம்பவத்தன்று சிறுமி பாடசாலைக்குச் செல்லாததால் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த சிறுமியை விற்பனை நிலையத்திற்கு வருமாறு தாய் தொலைபேசி அழைப்பொன்றை வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், விற்பனை நிலையத்திற்கு வருவதில் தாமதம் ஏற்பட்டதால், தாய் வீட்டுக்குக் குறித்த பாதை வழியாகச் சென்றபோது, மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து நடந்து சென்று கொண்டிருந்த போது, இறப்பர் மரத்தில் வெட்டப்பட்ட இறப்பர் மரத்தின் கிளை சிறுமியின் மீது விழுந்ததில் அவர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## “பொறுமைக்கு எல்லையுண்டு”

வாழ்க்கைச் செலவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பொறுமைக்கு எல்லையுண்டு, அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணாவிட்டால் தற்போது நாட்டில் நடக்கும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் ஆபத்தான போராட்டங்களாக மாறிவிடலாம் என்று எதிர்க்கட்சி சுயாதீன எம்.பி.யான அதுரலியே ரத்தன தேரர் எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற தொலைத் தொடர்பு திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், இலங்கையில் வாழ்க்கைச் செலவு மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருக்கின்றது. அனைத்து மரக்கறிகள் மற்றும் தானியங்களின் விலைகள் அதிகரித்துள்ளன. முடிந்தளவு அனைத்து வகையான மரக்கறிகள் மற்றும் தானியங்களை இங்கேயே உற்பத்தி செய்ய முடியும். அதற்காக மக்களை ஊக்கப்படுத்த வேண்டும். உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அரசியல் பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை, நாட்டில் அனைத்து இடங்களிலும் பணிபகிஷ்கரிப்பு அலை உருவாகி வருகின்றது. இதனை அரசியல் சூழ்ச்சிகள் என்று கூறி கடந்துசெல்ல முடியாது. மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு இதற்கு காரணமாக இருக்கலாம். இதற்கு எவராவது அரசியல் தலைமைத்துவம் வழங்கலாம். எனினும் இதில் பாரதூரமான நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்களின் பொறுமைக்கு எல்லையுண்டு. அடுத்து வரும் போராட்டம் மிகவும் பாரதூரமான நிலைமையை உருவாக்கிவிடலாம் என்றார்.

நீதிமன்றத்திற்குச் சென்றவர்களினால்

## ஆசிரியர் பற்றாக்குறை

பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கு எதிராக நீதிமன்றத்திற்குச் சென்றவர்களினால் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அரச தரப்பின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (9) வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கூற்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டு ள்ளார்.



மேலும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகையில்,,

பட்டதாரிகளின் பிரச்சினை தொடர்பில் பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் பேசி வருகிறோம். பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக சில குழுக்கள் கடந்த காலங்களில் நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தன. இதனால் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. மேல் மாகாணத்தில்தான் இந்த ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. மேல் மாகாணத்தில் ஆசிரியர் பரீட்சை நடத்தப்பட்டு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

அனைத்து பட்டதாரிகளுக்கும்

## வேலை வழங்குவாரா சஜித்?

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அமைக்கப்பட்டால் அனைத்து பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூற வேண்டும் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) வேலையில்லா பட்டதாரிகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் எழுப்பிய கேள்விகள் தொடர்பில் தனது கருத்தை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளதாவது,

மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ காலத்தில் பல்வேறு கட்டங்களில் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகங்கள் போன்றவற்றுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன. இதனால் அரசாங்கத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் எண்ணிக்கை 17 இலட்சம் வரையில் அதிகரித்துச் சென்றது. ஆனால், அரச சேவையில் 10 இலட்சம் எண்ணிக்கையிலானோரை கொண்டு அரச சேவைகளை நடத்திச் செல்லமுடியும் என்று முகாமைத்துவ சேவைகள் ஆணைக்குழு கூறுகின்றது.

இந்நிலையில், எதிர்காலத்தில்



உங்களின் அரசாங்கம் அமைக்கப்பட்டால் பட்டதாரிகள் என்றால் அரச நியமனங்கள் வழங்கப்படுமா ?, அனைத்து பட்டதாரிகளுக்கும் அரச நியமனங்கள் வழங்கப்படுமா என்று எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்கின்றேன் என்றார்.

# 1,700 ரூபாய்க்கு ஆர்ப்பாட்டம்...

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1,700 ரூபாயை வழங்குமாறு வலியுறுத்தி தோட்ட தொழிலாளர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (9) இரண்டாவது நாளாகவும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (மலையக நிருபர்கள்)









பலாங்கொடையில்...



பம்பலப்பிட்டியில்...



நானுஓயாவில்...





வடகொடயில்...



# இரண்டு நாட்களும் கடமைக்கு சமூகமளித்தோருக்கு கிடைத்த பரிசு

நமது நாட்டை பொறுத்தவரையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாட்களையும் மிகவும் சிரமத்துடனேயே கடத்திக்கொண்டிருக்கின்றனர். இதற்கிடையில், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள், பணி பகிஷ்கரிப்புகள் காரணமாக அப்பாவி மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதைச் சொல்லிச் சொல்லியே அழுத்து போய்விட்டது.

பிரதான தேர்தல்கள் நெருங்கும் தருணங்களில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், பல தொழிற்சங்கங்கள் வீதிகளில் இறங்கிவிடும். அதற்கிடையில், பல தொழில்துறைகள் வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்படும்.

பல கோரிக்கைகளை முன்வைத்து, அரச சேவை தொழிற்சங்கங்கள், ஜூலை 8, 9ஆம் திகதிகளில் சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். கோரிக்கைகளில் பிரதான கோரிக்கை சம்பள அதிகரிப்பாகவே இருந்தது. அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில்துறைகளைச் சார்ந்தவர்களுக்கு, 2024ற்கான வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக சம்பளம், கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டன.

இவ்வாறான நிலையிலேயே சம்பளத்தை அதிகரிக்குமாறு வலியுறுத்தி, சுகயீன போராட்டத்தில் அத்தரப்பினர் ஈடுபட்டனர். அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் சம்பளத்தை அதிகரித்தால், பெறுமதி சேர் வரியை (வற்) 20 சதவீதத்தில் இருந்து 21 சதவீதம் வரை அதிகரிக்கவேண்டிய நிலைமை ஏற்படுமென திறைசேரி எச்சரித்துள்ளது.

அதிகரித்திருக்கும் 'வற்' பல்வேறு தரப்பினரின் வயிற்றில் அடித்துள்ளது. இந்நிலையில், மீண்டுமொரு தடவை வற் அதிகரிக்கப்படுமாயின், நிலைமை இன்னும் மோசமாகும், இரண்டொரு வேளைகள் மட்டுமே சாப்பிட்டு வயிற்றுப்பசியை போக்கிக்கொண்டவர்கள், வெறும் வயிற்றுடன் வாடவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அரச சேவை தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில், திங்கட்கிழமை (08) நடைபெற்ற கலந்துரையாடலில் திறைசேரி செயலாளர் 'வற்' அதிகரிப்பு குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், 2024 ஆம் ஆண்டு ஜூலை 8ஆம், 9 ஆம் திகதிகளில் கடமைக்கு சமூகமளித்த, நிறைவேற்று தரத்திற்கு உள்ளடங்காத அரசாங்க அதிகாரிகளுக்கு விசேட சம்பள உயர்வொன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில், செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது,

இதேவேளை, எதிர்கால பதவி உயர்வுகளுக்குப் பயன்படுத்தும் வகையில் விசேட பாராட்டுச் சான்றிதழொன்றை வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. இவையிரண்டு தீர்மானங்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈட்டோருக்கு ஒரு பாடமாக அமையும் என்பதுடன், சுகயீன போராட்டத்தை நிறைவுக்குக் கொண்டுவந்து கடமைக்குத் திரும்புவோர். தங்களுடைய அன்றாட கடமைகளைத் திறம்படச் செய்கின்றனரா? மக்களுக்குச் சாதாரணமாகச் சேவைகள் கிடைக்கின்றனவா? என்பது தொடர்பில் அவதானம் செலுத்துவது அவ்வசியமாகும்.

ஏனெனில், எரிபொருள், சமையல் எரிவாயு உள்ளிட்டவையின் விலைகள் குறைக்கப்பட்டாலும், ஹோட்டல்கள், உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை என்பதை மீண்டும் நினைவூட்டுகின்றோம்.




# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்

No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா?



எம்.எஸ்எம்.ஐயூப்

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு வருடங்கள் என்று தீர்ப்பு வழங்குமாறும் அது வரை தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதை இடைநிறுத்துமாறும் கோரிக்கை விடுத்து கடந்த 3ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

மொரட்டுவையைச் சேர்ந்த சமின்திர டி.லேனவ என்ற வர்த்தகரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். கடந்த திங்கட்கிழமை அந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் ஒரு சில மணித்தியாலங்களிலேயே அதனை நிராகரித்தது.

உண்மையிலேயே உயர் நீதிமன்றம் அந்த மனுவை ஏற்றுத் தீர்ப்பை வழங்க வாய்ப்பே இருக்கவில்லை.

ஏனெனில், உயர் நீதிமன்றமே இதற்கு முன்னர் ஜனாதிபதியின் பதவிக் காலம் பற்றிய தற்போதைய அரசியலமைப்பின் வாசகங்களை இரண்டு முறை அங்கீகரித்துள்ளது. ஆறு வருடங்களாக இருந்த அப்பதவிக் காலம் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டபோது அத்திருத்தம் உயர் நீதிமன்றத்தால் பரிசீலித்து அங்கீகரிக்கப்பட்டது.

அதன் பின்னர் தமது பதவிக் காலம் ஐந்து வருடங்களா அல்லது ஆறு வருடங்களா என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2017ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைக் கோரியிருந்தார். அம்மனுவை விசாரித்தும் உயர் நீதிமன்றம் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்களே என்று விளக்கமளித்து இருந்தது. எனவே, இரண்டு முறை தாமே வழங்கிய தீர்ப்புக்கு முரணாக உயர் நீதிமன்றம் இம்முறை தீர்ப்பு வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்த வழக்கு எங்கிருந்து வந்தது என்றும் இதன் பின்னால் இருப்பது யார் என்றும் எதிர்க் கட்சியினர் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றனர்.

இக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு இருந்தால் வழக்கைத் தாக்கல் செய்தவர், உண்மையிலேயே எதனையும் அடையப் போவதில்லை. ஆனால், ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு வருடங்கள் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால் தற்போது பதவியியல் இருக்கும் ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்க நிச்சயமாக அத்தீர்ப்பின் மூலம் நன்மை அடையவே போகிறார். அதாவது அவரது பதவிக் காலம் பொதுவாக நம்பப்படுவதைப் பாரக்கிலும் ஒரு வருடத்தால் அதிகரிக்கப்பட்டு இருக்கும். அந்த நிலையில் வேண்டுமென்றால் லேனவ பல வழிகளில் ஜனாதிபதியிடம் உதவிகளைப் பெற முடியும்.

எனவே தான், இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது இதன் பின்னால் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க இருக்கிறார் என்று பலர் நினைத்தனர். ஆயினும் அடுத்த நாளே அதாவது ஜூலை 4ஆம் திகதியே ஜனாதிபதி விக்ரமசிங்க இந்த வழக்குக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று டுவிட்டர் பதிவொன்றில் குறிப்பிட்டு இருந்தார்.

சட்டப் படி ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்களே என்று தாம் நம்புவதாகவும், எனவே, இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்த முடிவு சரியென்றும் இந்த வழக்கைத் தாக்கல் செய்த லேனவ வழக்கைத் தாக்கல் செய்யுமுன் தம்மையோ தமது சட்டத்தரணிகளையோ அந்த விடயம் தொடர்பாகக் கலந்தாலோசிக்கவில்லை என்றும் ஜனாதிபதி மேலும் அந்த டுவிட்டர் பதிவில் தெரிவித்து இருந்தார்.

ஆனால், எதிர்க்கட்சியினர் அதனை ஏற்பார்களா என்பது சந்தேகமே. ஏனெனில், கடந்த வருடம் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்தப்பட இருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பிற்போட ஜனாதிபதி பல வகையில் முயற்சிகளை மேற்கொண்டார். இதேபோல் வழக்கொன்றின் மூலமே அத்தேர்தல்கள் முதன்முதலாக இரண்டு மாதங்களுக்கு மேல் ஒத்திவைக்கப்பட்டன. பின்னர் தேர்தலுக்காக வழங்கப் பணம் இல்லை என ஜனாதிபதியின் கீழ் இயங்கும் நிதி அமைச்சு தெரிவித்தது. அத்துடன், அத்தேர்தல்களை ஒத்திவைத்தமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வந்தது. எனவே, அத்தேர்தல்கள் இது வரை நடத்தப்படவில்லை.

இதேபோல் ஜனாதிபதித் தேர்தலும் ஒத்திவைக்கப்படலாம் என்று எதிர்க்கட்சிகள் கடந்த வருடத்திலிருந்தே அச்சம் தெரிவித்து வருகின்றன. ஜனாதிபதிக்கும் அவரது கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் மக்கள் ஆதரவு இல்லை என்று பல கருத்துக் கணிப்புக்கள் மூலம் கடந்த வருடம் முதல் தெரிய வருகிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முதலிடத்திலும் ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாம் இடத்திலும் இருப்பதாகவே கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் சுகாதார கொள்கை நிறுவனம் என்ற நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வந்த கருத்துக் கணிப்புக்களால் தெரிய வந்தது.

எனவே தான் 1982ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் பொதுத் தேர்தலை ஆறு வருடங்களுக்கு ஒத்திவைத்ததைப் போல் ஜனாதிபதித் தேர்தலையும் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் ஒத்திவைக்க வேண்டும் என்று ஐ.தே.கவின் தவிசாளர் வஜிர அபேவர்தன கடந்த வருடம் கூறியிருந்தார். அதே கருத்தைக் கடந்த மே மாதம் 28ஆம் திகதி ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் பாலித்தத ரங்கே பண்டாரவும் தெரிவித்து இருந்தார். ஆனால் ஐ.தே.க. ஏதோ ஒரு காரணத்தினால் அக்கருத்தை முன்னெடுக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியாத ஐ.தே.க. சர்வஜன வாக்கெடுப்பொன்றில் வெற்றி பெறவும் முடியாது என்பது அதற்கான காரணமாக இருக்கலாம். அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவே சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கும் போகும்.

இந்த நிலையில், தான் ஜனாதிபதி எவ்வளவு தான் மறுத்தாலும் திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட வழக்கின் பின்னாலும் ஐதேகவே இருந்திருக்கும் என்று பலர் நம்புகிறார்கள்.

இதற்கு முன்னர் பதவியிலிருந்த ஜே.ஆர்.ஜயவர்தன, சந்திரிகா குமாரதுங்கரூபவ் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகிய ஜனாதிபதிகளும் தமது பதவிக் காலத்தை நீடித்துக் கொள்ளக் குறுக்கு வழிகளைத் தேடினர். ரணசிங்க பிரேமதாசரூபவ் டி.பி.விஜேதுங்க மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய ஜனாதிபதிகள் அவ்வாறு செயற்படவில்லை.

பிரேமதாச தமது முதலாவது பதவிக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் புலிகளின் தற்கொலை குண்டுதாரி ஒருவரால் கொல்லப்பட்டார். கோட்டாபய தமது முதலாவது பதவிக் காலத்திலேயே பொதுமக்களால் விரட்டியடிக்கப்பட்டார். அவர்களும் தமது இரண்டாவது பதவிக் காலம் முடியும் வரை பதவியியல் இருந்திருந்தால் சிலவேளை இதேபோல் குறுக்கு வழிகளில் தொடர்ந்து பதவியியல் இருக்க முயன்று இருக்கலாம். விஜேதுங்க ஒரு அப்பாவி என்பதால் அவர் அவ்வாறு செய்திருக்க மாட்டார். அவர் அவ்வாறு செய்யவும் இல்லை.

ஜே.ஆர்.ஜயவர்தன முதன் முறையாக மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவில்லை.

அரசியலமைப்பு மாற்றம் ஒன்றின் மூலமாகவே 1978இல் ஜனாதிபதியானர்.

பின்னர் 1982ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக ஜனாதிபதியானார். அவரது இரண்டாவது பதவிக் காலம் 1988ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. அப்போது தாம் ஒரு முறை மட்டுமே மக்களால் ஜனாதிபதியாகத் தெரியப்பட்டதாகவும் எனவே தமக்குத் தேர்தல் மூலம் மற்றொரு முறை ஜனாதிபதியாக முடியும் என்றும் அவர் தமது கட்சி சகாக்களுடன் கூறியுள்ளார்.

அவரது வாதம் சரியாக இருந்த போதிலும் 1988ஆம் ஆண்டு ஜனாதிபதியாவதற்குக் காத்திருந்த பிரேமதாச அதனை ஏற்கவில்லை. தமக்கு 1988ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட இடமளிக்காவிட்டால் தாம் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுவதாக அவர் ஜயவர்தனரைவ மிரட்டியுள்ளார்.


பிரேமதாசவும் மிகவும் பலமான நிலையில் இருக்க இருவரும் போட்டியிட்டால் தம்மால் 1980ஆம் ஆண்டு குடியியல் உரிமை ஏழாண்டுகளுக்கு இரத்துச் செய்யப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவி சிறிமா பண்டாரநாயக்க பதவிக்கு வருவார் என்று பயந்த ஜயவர்தன பிரேமதாசவுக்கு விட்டுக் கொடுத்தார்.

சந்திரிகா தமது முதலாவது பதவிக் காலம் முடியுமுன் 1999ஆம் ஆண்டு இரண்டாவது மறையாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மீண்டும் ஜனாதிபதியானர். அவர் ஒரு வருடத்துக்குப் பின்னர் தமது முதலாவது பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் 2000ஆவது ஆண்டிலேயே சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும். ஆனால் அவர் 1999ஆம் ஆண்டு தேர்தல் முடிவடைந்த உடனேயே சத்தியப் பிரமாணம் செய்தார்.

அதன் பிரகாரம்; 2005ஆம் ஆண்டு தேர்தல்கள் திணைக்களம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முற்பட்ட போது தாம் 2000ஆம் ஆண்டும் மற்றொரு முறை பதவிப் பிரமாணம் செய்ததாகப் பொய்யைக் கூறி 2006ஆம் ஆண்டு வரை பதவியில் இருக்க முயன்றார். உயர் நீதிமன்றம் அதனைத் தடுத்தது.

மஹிந்த ராஜபக்ஷ அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் மூன்றாவது முறையும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பை பெற்றார். ஆனால், அவர் அத்தேர்தலில் தோல்வியடைந்தார்.

மைத்திரிபால தமது காலத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளாகக் குறைக்கப்பட்ட போதிலும் தாம் பதவிக்கு வரும் போது பதவிக் காலம் ஆறாண்டுகள் என்று இருந்தமையால் தமக்கு ஆறாண்டுகள் பதவியில் இருக்க முடியுமா என்று உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைக் கேட்டார் நீதிமன்றம் அதனை நிராகரித்தது. பதவி ஆசை எவரையும் விடாது. எனவே, இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை அது நடைபெறும் என்று உத்தரவாதமளிக்க முடியாது.



## வாழ்வியல் தரிசனம்

பெண்கள் கட்டாயமாகத் தற்பாதுகாப்புக் கலைகளைக் கற்றேயாகவேண்டும். பண்டைக் காலத்தில் இருந்தே, நமது வீரப் பெண்மணிகள் எதிரிகளுடன் போராடும் வித்தைகளைக் கற்றிருந்தனர். வாள் வீச்சு, சிலம்பம், குதிரையேற்றம் போன்ற போரியல் பயிற்சிகளை, ஆண்களுக்கு நிகராகக் கற்றுக் கொண்டனர். இதனால் அவர்களின் இரத்தத்தில், வீரம் செறிந்திருந்தது.

இன்று, பெண்களை மதிக்காது அவமானப்படுத்தும் கயவர்கள் கூட்டம் அதிகமாகிவிட்டார்கள். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை, அதனால், பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலைகளைப் பெண்கள் எதிர்கொண்டே ஆகவேண்டும். பெண்கள் தமக்கான அநீதிகளுக்கு எதிராகத் துணிச்சலுடன் போராட வேண்டும். தற்காப்புக் கலைகளைக் கற்றுக் கொண்டால், எவருக்கும், எந்நேரத்திலும் பயப்படத் தேவையில்லை.

ஆண், பெண் பேதமின்றி, தற்பாதுகாப்புக் கலைகளை அனைவரும் கற்றுக்கொண்டால், மனவுறுதி, வீரம், தேகபலம் எல்லாமே இணைந்துவிடுகின்றன. பெண்கள் சளைத்தவர்கள் அல்ல, எதிர்கொள்பவர்கள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பற்றைகளை துப்புரவு செய்யுங்கள்

முல்லைத்தீவு-ஒதியமலை கிராமத்திற்குச் செல்லும் வீதியின் இரு புறமும் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதன் காரணமாகப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

நெடுங்கேணியில் இருந்து பெரியகுளம் வழியாக ஒதியமலை வரையான ஐந்து கிலோ மீற்றர் வரையான வீதி நிரந்தரமாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. புனரமைக்கப்பட்ட வீதியின் இரு புறமும் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதன் காரணமாகப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்கொண்டுள்ளனர்.

வீதியின் இரு புறமும் பற்றைகளைத் துப்புரவு செய்வதற்குச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், ஒதியமலை பாடசாலைக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் வருகை தருவதற்குப் போக்குவரத்தினை துப்புரவு செய்து தருமாறும் பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

- நடராசா கிருஸ்ணகுமார்



# மறக்கப்படுமா மன்னாரின், மட்பாண்ட கைத்தொழில்



கனிஷ்ரா ஜெயகாந்தன்,
ஊடகத்துறை மாணவி,
மூன்றாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கறுக்காக்குளம் என்னும் கிராமத்தில் தமிழரின் பாரம்பரிய கைத்தொழிலாக விளங்குகின்ற மட்பாண்ட உற்பத்தி கைத்தொழிலினை இரண்டாம் தலைமுறையாக மேற்கொண்டு வருகின்ற வெள்ளைச்சாமி மகாலிங்கம் என்பவருடனான நேர்காணல்.

கேள்வி: உங்களுடைய பெயர், வயது மற்றும் குறித்த தொழிலை எத்தனை வருடங்களாகச் செய்து வருகின்றீர்கள்?

பதில்: எனது பெயர் வெள்ளைச்சாமி மகாலிங்கம், தற்போது எனக்கு 58 வயது, நான் கிட்டத்தட்ட 38 வருடங்களுக்கு மேலாக மண்பாண்ட உற்பத்தி கைத்தொழிலை மேற்கொண்டு வருகின்றேன்.

கேள்வி: நீங்கள் எவ்வாறான மட்பாண்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றீர்?

பதில்: அடுப்பு,சட்டி, முட்டி, வீட்டிற்குத் தேவையான சமையல் பாத்திரங்கள் மற்றும் பறவைகளுக்கான கூடுகள் போன்றவற்றை இங்கே உற்பத்தி செய்து வருகின்றேன்.

கேள்வி: எவ்வாறு இந்த கைத்தொழிலை பழக வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்ப்பட்டது?

பதில்: வீட்டில் எனது அப்பா சட்டி, பானை வனைவதனை பார்க்கும் போது எனக்கும் அதில் ஈடுபாடு ஏற்பட்டது. இந்த ஆர்வம்தான் என்னை மட்பாண்ட கைத்தொழிலை பழக தூண்டியது.

கேள்வி: நீங்கள் எவ்வாறு மட்பாண்ட உற்பத்தி பொருட்களைச் செய்யப் பழகினீர்கள்?

பதில்: ஆரம்பத்தில் அப்பாவிடம் இருந்து கற்றுக்கொண்டேன். பின்னர் எனது 20 வயதில் ஒட்டிசுட்டானின் போய் இங்கே இருந்து சில வருடங்கள் இக்கைத்தொழிலைக் கற்றுக்கொண்டேன். அதன் பின்பு என்னால் தனியாக மட்பாண்டங்களை உற்பத்தி செய்து கொள்ள என்னால் முடிந்தது.

கேள்வி: இந்த தொழிலைப் பழகுவதற்கு விசேட திறமைகள் ஏதும் தேவையென நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்: நிச்சயமாக. விசேட திறமை என்று சொல்வதனை விட, இத்த தொழிலைச் செய்வதற்கு மிக முக்கியமான விடயமாகப் பொறுமை வேண்டும். மண்ணை பதப்படுத்துவது, எமக்குத் தேவையான பொருட்களைக் கற்பனையில் நினைத்து அவற்றை மட்பாண்டங்களாக வனைவது, சூளையிடுவது, அடுக்குவது விற்பனைக்காகக் காத்திருப்பது, இலாபத்திற்காகக் காத்திருத்தல் என எல்லாவற்றிக்கும் பொறுமை முக்கியமாக தேவைப்படுகின்றது.

கேள்வி: உங்களுடைய கைத்தொழிலுக்கு தேவையான மூலப்பொருளை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றீர்கள்?

பதில்: மடுக்கரையில் இருந்து பெற்றுக்கொள்கின்றேன். வருடம் ஒன்றிற்கு 4 டிப்பர் மண் மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி காணப்படுகின்றது.

கேள்வி: மன்னாரில் நீங்கள் மட்டுமா இந்த கைத்தொழில் ஈடுபட்டு வருகின்றீர்கள்?

பதில்: இல்லை. மன்னாரில் பலர் இவ்வுற்பத்தியில் ஈடுபட்டு வந்தார்கள். இருந்த போதிலும் மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினால் மெல்ல மெல்ல குறைவடைந்து, தற்போது நானும் மடுக்கரையில் ஒருவரும் ஈடுபட்டுபட்டு வருகின்றோம். எங்களை விட யாரும் இக்கைத்தொழில் ஈடுபட்டு வருவதாக நான் அறியவில்லை.

கேள்வி: உங்களுடைய உற்பத்திப் பொருட்களை எங்கெல்லாம் விற்பனை செய்கின்றீர்கள்?

பதில்: மன்னார், நொச்சியாகம, வவுனியா மற்றும் வருடத்தில் ஒன்றிரண்டு தடவைகளில் மட்டக்களப்பில் இருந்து வந்து மொத்தமாக மட்பாண்ட உற்பத்திப்பொருட்களை கொள்வனவு செய்து செல்வார்கள்.

கேள்வி: மழைக்காலங்களில் உங்களுடைய தொழில் எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது?

பதில்: மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முதலே இரண்டு, மூன்று மாதங்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து காயவைத்து, சூளையிட்டு அடுக்கிவிடுவோம் மழைக்காலங்களில் நாங்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். மீண்டும் கோடைக் காலம் ஆரம்பமாக மட்பாண்ட உற்பத்தியில் ஈடுபடுவோம்.

கேள்வி: மட்பாண்ட உற்பத்தியின் படிநிலைகளை பற்றி கூறமுடியுமா?

பதில்: ஆம். தேவையானளவு மண்ணை தெரிவு செய்து அதனை தொட்டித் தண்ணீர் கரைத்து,வடிகட்டி,அதிலுள்ள குப்பைகள், கற்களை அகற்றி களித்தன்மையில் சிறிய சிறிய கட்டிகளாக முதலில் சேகரித்துக்கொள்ள வேண்டும். பின்னர் சக்கரத்தில் வைத்து எமக்குத் தேவையான அளவில்,தேவையான பாத்திரங்களை வனைந்து அவற்றை மெதுவாகத்தட்டி, பலப்படுத்தி, வர்ணம்சி,காயவைத்துக்கொள்ள முடியும்.

அதன் பின்பு பாத்திரங்களைச் சூளையில் அடுக்கித் தகுந்த விறகு மற்றும் வைக்கோல் கொண்டு மாறி மாறி சூளையிட வேண்டும். இவை அனைத்தையும் செய்த பின்னரே குறித்த மண்பாண்டங்களை விற்பனை செய்யலாம்.

இவற்றிற்கு எல்லாமே பொறுமையும் நிதானமும் அவசியம் கொஞ்சம் பொறுமை இழந்தால் கூடி பொருட்களில் ஓட்டை, நெளிவு, வடிவம் மாறுதல் மற்றும் உடைவு ஏற்படுவதற்கு நிறைய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

கேள்வி: சூளை கொட்டில் அமைத்தல் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகள் எவ்வாறு காணப்படுகின்றது?

பதில்: சூளை அமைத்து மண்பாண்டங்களைச் சுடுவது என்பது எமது தொழிலின் பிரதான விடயமாகக் காணப்படுகின்றது. இதற்குத் துணையாக அமைக்கப்படுவதே சூளை கொட்டில் ஆகும். அந்த வகையில் ஒரு சூளை கொட்டில் அமைப்பதற்கு 150,000 ரூபாய்கள் வரை தேவைப்படுகின்றது. சூளை சுவர்கள் களி மண்ணாலும், கூரைகள் ஓடு மற்றும் தகரம் போன்றவற்றைக் கொண்டு அமைக்கப்படுகின்றது. இரண்டு வருடங்கள் மாத்திரம்தான் ஒரு சூளைக்கொட்டிலை பயன்படுத்த முடியும். பின்பு புதிய சூளை அமைக்கப்பட வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது.

கேள்வி: எத்தனை மாத இடைவெளியில் சூளை இடுவீர்கள்?

பதில்: மாத இடைவெளிகள் இல்லை. குறைந்தது 400 தொடக்கம் 500 வரையிலான மட்பாண்டங்களைச் செய்த பிறகு அவற்றை ஒரே தடவையில் சூளையிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளோம்.

கேள்வி: ஆரம்காலத்திற்கும், தற்காலத்திற்கும் இடையிலான மண்பாண்ட உற்பத்திபொருட்களின் நுகர்வு மக்கள் மத்தியல் எவ்வாறு காணப்படுகின்றது?

பதில்: ஆரம்பக் காலங்களில் மக்கள் மத்தியில் மண்பாண்டங்களுக்கு நல்ல கேள்வி காணப்பட்டது, ஆனால், தற்போதைய சூழலில் மட்பாண்டங்களுக்கான கேள்வி குறைவடைந்து மக்கள் ஏனைய பிரதியீட்டு பொருட்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்துவதன் காரணமாக எமது உற்பத்தி வீழ்ச்சியடைந்துகொண்டே செல்கின்றது. மற்றும் தற்போது வீட்டு வியாபாரம் குறைவடைந்து மொத்த கேட்பவர்களுக்கு மாத்திரம் பொருட்களைச் செய்து கொடுக்கக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

கேள்வி: இத்தொழிலின் ஊடாக கிடைக்கும் வருமானம் உங்களுடைய வாழ்வாதாரத்தினை கொண்டு நடத்த போதுமானதாக உள்ளதா?

பதில்: பொருளாதார ரீதியாகப் பார்க்கின்ற போது தற்கால சூழலில் வருமானம் போதுமானதாக இல்லை. இருந்த போதிலும் எங்கள் குடும்பத்தினை இவ்வளவு காலமும் வாழ வைத்துக்கொண்டிருந்த இந்த தொழிலை நான் குறை சொல்ல விருப்பவில்லை.

## குறிப்பு..

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஊடகக்கற்கைகள் துறை மாணவி ச.சர்மிளா, ‘LGBTIQA+ சமூகத்தினர் எதிர்கொள்ளும் உளப்பிரச்சினை’ எனும் தலைப்பில் எழுதிய கட்டுரை தமிழ்மிரர் மின்னிதழில்,செவ்வாய்க்கிழமை(09) வெளியானது. எனினும், அதில், கட்டுரையாளரின் புகைப்படம் தவறாக இணைக்கப்பட்டுள்ளது. அதனால் கட்டுரையாளருக்கு ஏற்பட்ட அசௌகரித்துக்கு வருந்துகின்றோம்.

அந்தக் கட்டுரையில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படம், ‘மறக்கப்படுமா மன்னாரின் மட்பாண்ட கைத்தொழில்’ எனும் தலைப்பில் புதன்கிழமை (10) எழுதியிருக்கும், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் ஊடகத்துறை மூன்றாம் வருட மாணவி கனிஷ்ரா ஜெயகாந்தன் என்பவருடையது. (ஆ+ர்)


# தெலுங்கு நகருக்கு ஒரு பயணம்



ச.தனுஷ்கா,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.




கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீகக் கிராமம் தம்பலகாமம்இவயலும் வயல் சார்ந்த மருதநிலப் பிரதேசமாகும். இது அழகிய விவசாயக் கிராமமாகும். கொழும்பிலிருந்து திருகோணமலை செல்லும் நெடுஞ்சாலையில் கந்தளாய் மற்றும் திருகோணமலை நகர்களிடையில் திருகோண மலையிலிருந்து 22 கிலோமீட்டர் தொலைவில் இது அமைந்துள்ளது. இங்கு ஆதி கோணேச்சரம் என்னும் பெயரில் ஒரு சிவன் ஆலயம் உள்ளது. இந்த ஆலயம் சம்பந்தரால் பாடல் பெற்ற திருக்கோணேச்சரம் ஆலயத்தின் வரலாற்றுடன் தொடர்புடையது. ஒல்லாந்தர் திருக்கோணேச்சரம் ஆலயத்தை அழித்தபோது சில நலன் விரும்பிகள் ஆலயத்தில் இருந்த சில விக்கிரகங்களை தம்பலகாமத்தில் பாதுகாத்தனர். பிற்காலத்தில் பாதுகாத்த விக்கிரகங்களை கொண்டு ஆதி கோணேச்சரம் ஆலயத்தை அமைத்தனர். தம்பலகாமம் மக்களது பெரும் நம்பிக்கையைப் பெற்ற வழிபாட்டுஸ்தளமாகும்.





இங்கு வாழும் மக்களது பிரதான ஜீவனோபாயமாக விவசாயம் காணப்படுகிறது. கந்தளாய் குளத்திலிருந்து பெறும் நீர் மூலம் இங்கு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. பெரும்படியாக இங்கே விவசாயம் செய்யப்படுகிறது. 12 கிராம சேவகப் பிரிவுகள் தம்பலகாமத்தில் காணப்படுகின்றன. அவையாவன, பாலம் போட்டாறு, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, கல்மிட்டியா தெற்கு, சிறாச் நகர், முள்ளிப்பொத்தானை கிழக்கு, முள்ளிப்பொத்தானை வடக்கு, மீரா நகர், பொற்கேணி, புதுக்குடியிருப்பு, கோவிலட, கல்மிட்டியா வடக்கு, போன்றனவாகும். இங்கு வாழும் மக்கள் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம், கூலித்தொழில், அரசு தொழில்களில் ஈடுபடுகின்றனர். 2018ஆம் ஆண்டு தம்பலகாமம் பிரதேச மக்கள் வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் தொழில் பற்றிய விபரத்தில் 3,152 மக்கள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இவ்வூரின் சிறப்படையாளம் என்னவென்றால், குறைவில்லாத அளவில் மலை, காடு, குளம் போன்ற அனைத்து வளங்களையும் தன்னகத்தே நிறைவாகக் கொண்ட மைந்த இயற்கை எழில் நிறைந்த பூமி தம்பலகாமம். மிக நீண்ட காலம் இடம்பெற்ற யுத்தம் அனர்த்தம், திட்டமிட்ட குடியேற்றங்கள், பாரிய உள்நாட்டு வெளிநாட்டு இடம்பெயர்வுகள், இயற்கை அழிவுகள், படுகொலைகள் இவன் செயல்கள் என்று பல்வேறுபட்ட காரணங்களால் மிக அதிகளவில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இதுவுமொன்று. ‘தம்பலகாமம்’ என்ற பெயர் சுமார் 800 வருடங்களுக்கு முன்னதாகவே வழக்கில் இருந்து வரும் ஊர் பெயராகும்.

இதனைப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட ‘தம்பலகாமம் கல்வெட்டு’ நூல் ஆதாரப்படுத்துகிறது. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினைச் சேர்ந்த இக்கல்வெட்டில் ‘தம்பலகாம ஊர்’ என தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய பாரம்பரியமும் வரலாற்றுச் செழுமையும் உள்ள ஊரில்தான் ‘தெலுங்கு நகர்’ காணப்படுகிறது. பெயரிலேயே நம் நாட்டில் புழக்கமில்லாத மொழியைத் தாங்கி இருக்கும் இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் பற்றிய அறிந்து கொள்ளவேண்டும் என்ற தேடலுடன் என் பயணத்தை ஆரம்பித்தேன்.




தம்பலகாமம் 2018ஆம் ஆண்டு குடித்தொகை கணக்கெடுப்பின்படி 20,614 முஸ்லிம்களும் 7,554 சிங்களவர்களும் 6,563 தமிழர்களும் வாழ்கின்றனர். இம்மக்கட் கூட்டத்திலேயே தெலுங்கர்களும் கலந்து வாழ்கின்றனர். தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் தெலுங்கு நகர் எனப்படும் இடத்தில் உள்ளனர். தம்பலகாமம் கிராமத்தை அடைந்தவுடன் அங்குள்ள திருவள்ளுவர் வீதியினூடாக தெலுங்கு நகரை அடைய முடியும். தற்போது இங்கு மூன்று தலைமுறையாகத் தெலுங்கு மக்கள் வாழ்கின்றனர். தெலுங்கு நகரில் உள்ள குடும்பமொன்றைச் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர்களுடனான கலந்துரையாடலில் அம்மக்கள் எவ்வாறு இலங்கை வந்தனர், அவர்களின் முன்னோர்களது சவால்கள் மிகுந்த வாழ்க்கை அனுபவங்கள், தொழில்கள், தற்போது இம்மக்களது வாழ்வாதாரம் எவ்வாறு உள்ளது போன்ற பல விடயங்களை என்னோடு பகிர்ந்தனர்.

இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட தெலுங்கு மக்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்காகத் தொழிலுக்காக இலங்கைக்குத் தஞ்சமடைந்தனர். இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்த இம்மக்களது பரம்பரைத் தொழிலாக விளங்கியது சாஸ்திரம் கூறலாம். ஓலைச்சுவடிகளைக் கொண்டு சாஸ்திரம் பார்ப்பதையே காலம் காலமாக தமது தொழிலாகக் கொண்டுள்ளனர். இம்மக்களது கடந்த கால வாழ்க்கையானது வலிகள் மிகுந்தவை. இந்தியாவிலிருந்து தொழிலுக்காக இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு இலங்கையில் நில உரிமை ஆரம்பத்தில் வழங்கப்படவில்லை.தொழிலுக்காக நாடோடிகள் போல ஒவ்வொரு ஊராகப் பயணித்தனர். தமக்கு நல்ல வருமானம் கிடைக்கும் ஊரிலேயே நிரந்தரமாக தங்குவார்கள், குடியிருப்பு என்பது அத்திவாரமிட்ட சீமெந்து கல்லு விடல்ல. பார்வைக்கு விசாலமாகப் பரந்து விரிந்திருக்கும் பெரிய மரங்களே இவர்களது உறைவிடமாக அன்று இருந்தது. துணிகளால் மறைவாகச் சுற்றிவரக் கட்டிக்கொண்டு சிறுவர் முதல் முதியவர்கள் வரை அத்துணி மறைவிலேயே வாழ்க்கையைக் கொண்டு நடாத்தினர். மலை, வெயில், கடும் குளிரென இயற்கை சோதனைகளை வழங்கினாலும் துவண்டு போகாத மக்கள், நாகரீகம் என்னும் போர்வையில் தம்மைப் போர்த்திக் கொண்டு காமத்துடன் அலையும் சில மனித மிருகங்களின் தொல்லைகள் இவர்களின் நாடோடி வாழ்க்கைக்கு உள்ளார்ந்த காரணமாகும். இலங்கையில் ஆரம்பக் காலத்தில் சாஸ்திரம் சொல்லும் தெலுங்கு மக்கள் குறைவான கண்ணோட்டத்திலேயே பார்க்கப்பட்டனர். பல விலகல்கள், அடக்குமுறைகளுக்கு முகம் கொடுத்தனர். பொதுப் போக்குவரத்து உரிமையையும் இழந்து பல மைல்கள் நடந்து இன்னொரு ஊரைச் சென்றடைந்த கதைகளுமுண்டு.

இம்மக்கள் ஏனையோர்களால் ஒதுக்கப்பட்டதால் தமது சமூகத்திற்கென விதிமுறைகளை வகுத்துக் கொண்டு அதற்கு ஒரு தலைவரையும் கொண்டிருந்தனர். இம்முறைமை ‘ஹூடாங்காடு’ என்று அழைக்கப்பட்டது. தற்காலத்தில் இவை வழக்கில் இல்லை. இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டு சாஸ்திரம் சொல்லுதல், சுடலை வழிபாடுகளில் ஈடுபடுதல், குடுகுடுப்பை அடித்து ஜோசியம் சொல்லுதல் இவர்களது பூர்வீகத் தொழிலாகக் காணப்பட்டது.

(வியாழக்கிழமை தொடரும்...)



விருதுநகர்

சிவகாசி வெடி விபத்தில்

# இருவர் உயிரிழப்பு



விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே திங்கட்கிழமை (08) ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

சம்பவ தினமான திங்கட்கிழமை (08) காலை வழக்கம்போல பட்டாசு ஆலையில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில், பட்டாசு தயாரிப்பதற்கான மருந்து கலவை தயார் செய்யும் பணியின் போது உராய்வு ஏற்பட்டு திடீரென வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் இரண்டு தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்த நிலையில், பெண் ஒருவர் உட்பட இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களை மீட்டு சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இச் சம்பவம் குறித்து முதற்கட்ட விசாரணையில், பட்டாசு தயாரிப்பதற்கான இரசாயன பொருட்களை எடுத்துச் செல்லும் பொழுது கீழே விழுந்ததில் ஏற்பட்ட உராய்வில் வெடித்துச் சிதறியதாகத் தெரியவந்துள்ள நிலையில், பொலிஸாரின் முழு விசாரணைக்குப் பின்னரே முழுமையான காரணம் தெரிய வரும் என தெரிவிக்கப்படுகின்றது.

திருப்பூர்

இரவில் கூரை மேல் விழும் கற்களால்

# அச்சத்தில் மக்கள்

திருப்பூர் அருகே வீடுகள் மீது விழும் கற்களால் பொதுமக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் மின் விளக்குகள், டிரோன் கேமரா மற்றும் கிரேன் உதவியுடன் தீவிர கண்காணிப்பில் பொதுமக்கள் பொலிஸாருடன் இணைந்து ஈடுபட்டுள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அடுத்த ஒட்டபாளையம் கிராமத்தில் கடந்த 12 நாட்களாக இரவு நேரத்தில் தொடர்ந்து கற்கள் விழுந்த வண்ணம் இருந்தது. இதனால் அச்சமடைந்த அப்பகுதி பொதுமக்கள் அருகில் இருக்கும் கோவிலில் தஞ்சமடைந்தனர்.

இந்நிலையில், அந்தப் பகுதி முழுவதும் சிசிடிவி கெமராக்கள் பொருத்தப்பட்டு மின் விளக்குகள் அமைத்து கிரேன் உதவியுடன் தீவிர கண்காணிப்பு பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே கற்கள் வீசப்பட்டதால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழல் குறித்தும் பொதுமக்களின் பாதுகாப்பு குறித்தும், காங்கேயம் வட்டாட்சியர், கிராமத்தில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும், கற்கள் வீசும் நபர் குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருவதாகவும் தகவல் அளித்துள்ளார்.



சென்னை

கள்ளுக்கடைகளை திறக்கக் கோரி

# ஆர்ப்பாட்டம்



தமிழகத்தில் மீண்டும் கள்ளுக்கடைகளைத் திறக்க வலியுறுத்தி தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரவை சார்பில் செவ்வாய்க்கிழமை(9) சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் சட்டவிரோத மதுவை முற்றாக ஒழிக்க வேண்டும். கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டும். பூரண மதுவிலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரவை சார்பில் சென்னை எழும்பூரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 100க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டம் குறித்து சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் பேசுகையில், "பூரண மதுவிலக்கை நோக்கிச் செல்லும் பயணத்தில் எதற்காகக் கள்ளுக்கடைகளைத் திறக்கக் கோருகிறோம். போதைக்கு மாற்றுப் போதையா என்ற கேள்வி கண்டிப்பாக வரும். இதை நான் சொல்லவில்லை. அமைச்சர் முத்துசாமி சொல்லியிருக்கிறார். மதுப்பிரியர்கள் குடியை நிறுத்திவிட்டால் அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும். அதனால் பூரண மது விலக்கை அமல்படுத்தவில்லை எனக் கூறியிருக்கிறார்.

அதேபோல கனிமொழி எம்.பியும், "தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் அனைத்து மதுக்கடைகளையும் மூடிவிடுவோம்" என்று சொல்லி இருந்தார். ஆனால், அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சட்டவிரோத மதுவால் 65 பேர் உயிரிழந்துள்ளனர். இத்தவறுகளை மறைக்க ரூ.10 இலட்சம் இழப்பீடு. யாருடைய வரிப் பணத்தில் இதைச் செய்கின்றனர். விரைவில் குடிகார மாநிலமாகத் தமிழகம் மாறும்.

எனவே, பூரண மதுவிலக்கை நோக்கிச் செல்லும் பயணத்தில் மதுப் பிரியர்களால் உடனடியாக குடியை நிறுத்த முடியாது. அதற்கு சில கால அவகாசம் தேவை. இதையொட்டியே கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம். ஏற்கெனவே கள்ளுக்கடைகளைத் திறக்க முற்பட்டபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த முறை குண்டுகளை நெஞ்சில் வாங்கிக் கொள்ளவும் தயாராக இருக்கிறோம்" என்றார்.

கீவ்

# "குற்றவாளியை கட்டி அணைக்கிறார் மோடி"



உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தலைவர், குற்றவாளியைக் கட்டி அணைப்பது ஏமாற்றம் அளிப்பதாக உக்ரைன் நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். இதுகுறித்து எக்ஸ் தள பதிவு ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

பிரதமர் மோடி இரண்டு நாள் பயணமாக ரஷ்யாவுக்குச் சென்றுள்ள நிலையில், அவர் ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்துப் பேசினார். இருவரும் பரஸ்பரம் தங்களது நட்பினை வெளிப்படுத்தினார். அப்போது ஒருவரை ஒருவர் கட்டியணைத்துக் கொண்டனர். இந்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகிய நிலையில் ஜெலன்ஸ்கி இதனைத் தெரிவித்துள்ளார்.

"உக்ரைனில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 37 பேர் உயிரிழந்தனர்.

அதில், மூவர் சிறுவர்கள். 170 பேர் காயமடைந்துள்ளனர். உக்ரைனில் அமைந்துள்ள மிகப்பெரிய குழந்தைகள் மருத்துவமனை மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியது. இளம் புற்றுநோயாளிகள் தான் அவர்களது இலக்கு. பலர் அதன் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தலைவர், உலகில் கொடுங்கோன்மை செயல்களைச் செய்யும் குற்றவாளியை மொஸ்கோவில் கட்டி அணைப்பதைப் பார்க்கும் போது, அமைதி முயற்சிகளுக்கு பெரும் ஏமாற்றம் தருவதாக அமைந்துள்ளது" என ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் நாட்டின் ஐந்து நகரங்களின் மீது திங்கட்கிழமை அன்று ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியதில், 40க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் முக்கிய கட்டிடங்கள் தாக்கப்பட்டன. இதில் குழந்தைகள் மருத்துவமனையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.





புத்தளம் வலய 16 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்தாட்டம்:

# சம்பியனான வெட்டாளை அசன் குத்தூஸ் மு.ம.வி

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் வலய மட்ட கால்பந்தாட்ட போட்டகளில் புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 16, 18 வயதுக்குட்பட்ட அணிகள் சம்பியனாகி மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

16 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள் சாஹிரா தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றபோது, இறுதிப் போட்டியில் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே அசன் குத்தூஸ் முஸ்லிம் வித்தியாலயம் சம்பியனானது.

18 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றபோது இறுதிப் போட்டியில் அசன் குத்தூஸ் வித்தியாலயத்தை 1-0 என்ற கோல் கணக்கில் வென்று சாஹிரா தேசிய கல்லூரி சம்பியனானது.

அசன் குத்தூஸ் பாடசாலையின் 52 ஆண்டு வரலாற்றில் இதுவே முதன் முறையாக இரண்டு அணிகள் மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இவ்வெற்றிக்காக உழைத்த பாடசாலையின் முதல்வர் ஏ.ஜே.எம். இல்ஹாம், பிரதி அதிபர் எம்.எஸ்.எம்.மொஹிதீன், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எச்.எச்.அம்லக் மொஹமட், ஆசிரியர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோருக்கு பெற்றோர்கள் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து எதிர் மேற்கிந்தியத் தீவுகள்:

# இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்



இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது லோர்ட்ஸில் இன்று புதன்கிழமை (10) பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

இப்போட்டியுடன் இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் ஓய்வு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இப்போட்டியில் விளையாடும் இங்கிலாந்து அணி அறிவுக்கப்பட்டுள்ள விக்கெட் காப்பாளர் ஜேமி ஸ்மித், வேகப்பந்துவீச்சாளர் குஸ் அட்கின்ஸன் ஆகியோர் அறிமுகத்தை மேற்கொண்டுள்ள நிலையில், ஷொய்ப் பஷிர் சுழற்பந்துவீச்சாளராகவும் மற்றைய வேகப்பந்துவீச்சாளராக கிறிஸ் வோக்ஸ் விளையாடவுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றி வாய்ப்பானது அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட், ஜேஸன் ஹோல்டர், ஜேடன் சியல்ஸ் அல்ஸாரி ஜோசப், ஷாமர் ஜோசப் ஆகியோரின் பெறுபேறுகளிலேயே தங்கியுள்ளது.

# சாய்ந்தமருது பிளாஸ்டர் வீரர்களுக்கு கௌரவிப்பு

## முஷாரப் எம்.பி. விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்



கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக வீரர்கள் கிழக்கு மாகாண முன்னணி விளையாட்டுக் கழகங்களை வீழ்த்தி தொடர்ச்சியாக மூன்று சம்பியன் பட்டங்களை பெற்றமையை பாராட்டி வீரர்களுக்கு கௌரவமளிக்கும் நிகழ்வு கழக முகாமையாளர் எம்.எம்.பஸ்மீரின் நெறிப்படுத்தலில் கழகத் தலைவரும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை உத்தியோகத்தருமான எம்.பி.எம்.பாஜிலின் தலைமையில் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கழக தவிசாளரும், ஓய்வுபெற்ற பிரதியதிபருமான ஏ.எம்.நிஸாரின் ஆரம்ப உரையுடனும், கழக ஊடக செயலாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினருமான நூருல் ஹுதா உமரின் அறிமுக உரையுடனும் ஆரம்பமான இந்த பாராட்டு விழாவில் கல்முனை அபிவிருத்தி குழுத்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீரர்களை பாராட்டி கௌரவித்ததுடன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப், அம்பாறை மாவட்ட கிரிக்கட் வீரர்களை தேசிய அணியில் இடம்பிடிக்கச்செய்ய தேவையான வேலைத்திட்டங்களை தான் இனிவரும் காலங்களில் முன்னெடுக்க தயாராக உள்ளதாகவும் கடந்த காலங்களில் நாட்டின் நிலை மோசமானதாக இருந்ததாலும் கொரோனா தொற்றின் காரணமாக நாடு சிக்கலில் இருந்ததால் இது தொடர்பில் சிந்திக்க நேரம் இருந்திருக்கவில்லை என்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 10 ஜூலை 2024, இல. 8, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.